செம்பியன்மாதேவி –மதுரா/ செட்டியந்தல் ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை: T.சங்கரலிங்கம்

பொருள்: மனைப்பிரிவு அனுமதி- கள்ளக்குறிச்சி மாவட்டம்- உளுந்தூர்பேட்டை வட்டம்- உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம்- செம்பியம்மாதேவி ஊராட்சி, செட்டியந்தல் கிராம சர்வே எண்: 18/12C , 2.20 ஏக்கர் 8891.00 சதுர மீட்டர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைத்தல்-அனுமதி வழங்க உத்தரவிடல்-தொடர்பாக.

பார்வை:

1. திரு. N.கலையரசன் - 1/129,தெற்கு தெரு, ,செம்பியன்மாதேவி, கள்ளக்குறிச்சி மாவட்டம்.
2. அரசு ஆணை எண்.255 ஊரக வளர்ச்சித்துறை (சி2) நாள்: 16.08.1997
3. அரசாணை எண்.79,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4) (3) துறை நாள்.04.05.2017
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,கள்ளக்குறிச்சி அவர்களின் இணையதள கோப்பு எண். WKVD72TV/17043/2023 நாள்:11/01/2024 . இறுதி ஒப்புதல் எண் : 003 /2024
5. செம்பியன்மாதேவி –மதுரா/ செட்டியந்தல் கிராம மன்ற தீர்மான எண். 54 /2024 நாள்:21 / 2 /2024

உத்தரவு:

உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செம்பியன்மாதேவி – மதுரா/ செட்டியந்தல் கிராம சர்வே எண்-18/12C -ல் 2.20 ஏக்கர் 8891.00 சதுர மீட்டர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க பார்வை 1–ல் காணும் கடிதத்தின்படி விண்ணபித்துள்ளார். பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் இணையதள கோப்பு எண். WKVD72TV/17043/2023 நாள்: 11/01/2024 -ன் படி கூராய்வு கட்டணம் ரூ.1000 மற்றும் நிலம் பயன் மாற்று கட்டணம் உரிய

தலைப்பில் செலுத்திய பின் அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார். நிலபயன்மாற்று கட்டணமாக ரூபாய் -16500 /- ஐ

தேதியில் உரிய தலைப்பில் செலுத்தியுள்ளார் மற்றும் ஊராட்சி கூராய்வு கட்டணமாக ரூ.1000-ம் ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனைகளுக்கு தமிழ் நாடு 1994 ஆம் வருட ஊராட்சிகள் சட்டம் பிரிவு 2(சி)-ன் படியும் பார்வை 2-ல் காணும் அரசாணையின் படி கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| | |
|---|---|
| விண்ணப்பதாரர் பெயர் | : திரு. N.கலையரன் |
| முகவரி | : 1/129,தெற்கு தெரு<br>செம்பியன்மாதேவி,<br>கள்ளக்குறிச்சி மாவட்டம். |
| மனைப்பிரிவு அமையும் இடம் | : செம்பியன்மாதேவி –ஊராட்சி/<br>செட்டியந்தல் கிராம<br>சர்வே எண்-18/12C |
| பரப்பளவு | : 2.20 ஏக்கர் 8891.00 சதுர மீட்டர் |

<u>நிபந்தனைகள்:</u>

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,கள்ளக்குறிச்சி அவர்களின் இணையதள கோப்பு எண். WKVD72TV/17043/2023 நாள்: 11/01/2024 -ன் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி அனுமதி வழங்கப்படுகிறது.
2. ஊராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள்,அளவுகள் பொது ஒதிகீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றம் செய்யக் கூடாது.
3. அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்றமனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்க்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

4. பொது பயன்பாட்டிற்காக உள்ளாட்சியில் ஒப்படைக்கப்பட்ட தெருக்கள் மற்றும் பொது இடத்தில எந்த வித மாற்றமும் செய்யக் கூடாது.

5. மனுதாரர் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலையின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6X4 அளவிலான நிரந்தர தகவல் பலகை பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற ஊராட்சி மன்ற தீர்மான எண் தெளிவாக குறிப்பிட்டு தகவல் பலகை வைக்கப்படவேண்டும்.

6. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில அமையும் மனைகளின் மூலைகள் வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அனுமதிக்கப்படவேண்டும்.

ஊராட்சி மன்ற தலைவர்
செம்பியன்மாதேவி –மதுரா/ செட்டியந்தல்

தலைவர்
ஊராட்சி மன்றம்,
செம்பிமாதேவி ஊராட்சி

பெறுதல்:

திரு. N.கலையரன்
1/129,தெற்கு தெரு
செம்பியன்மாதேவி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்

நகல் : இருப்பு கோப்புக்கு

நகல் :

1. சார்பதிவாளர் ,
சார்பதிவாளர் அலுவலகம்
எலவனாசூர்,கள்ளக்குறிச்சி(DR), கள்ளக்குறிச்சி (DT)
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.